# குடும்பம் மற்றும் குடும்ப வன்முறைகளுக்கான நிதி உதவி திட்டம்



ஆஸ்திரேலிய செஞ்சிலுவை சங்கம் (The Red Cross) குடும்பம் மற்றும் குடும்ப வன்முறைகளுக்கான (FDV) நிதி உதவி திட்டம் இப்பொழுது உதவி தேவைப்படும் தனி நபர்களுக்கு மற்றும் சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

இத்திட்டம் தற்காலிக விசா வைத்திருக்கும் அனைவருக்கும் மற்றும் விசா மேலும் குடும்பம் மற்றும் குடும்பம் வன்முறைகளுக்கு ஆளானவர்கள் மற்றும் பொருளாதார உதவி தேவைப்படுபவர்களுக்கும் வழங்கப்படும்.

### இத்திட்டம் எவ்வாறு எனக்கு உதவும் ?

இத்திட்டம் கீழ்க்கண்டவர்களுக்கு உதவியாக இருக்கும்:

- ஆஸ்திரேலிய குடிமக்கள் அல்லது நிரந்தர குடியேறிகளாக இல்லாமல் இருத்தல்
- குடும்பம் மற்றும் குடும்ப வன்முறைகளில் துன்பப்படுவோர்
- பொருளாதார பிரச்சனைகளை சிக்கி துயரப்படுவோர்.

### எப்படிப்பட்ட உதவிகளை நான் பெற முடியும் ?

திட்டத்தில் வழங்கப்படும் உதவிகள்:

- பொருளாதார உதவி
- உதவி செய்யும் நிறுவனங்களுக்கு தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்தல்
- வழக்கு தொடர்பான உதவிகள் (3 மாதங்களுக்கு மட்டும்)

### நிதியுதவி பெறுவதற்கு கீழ்க்கண்ட விபரங்களை வழங்க வேண்டும்:

- **விசா சான்று**:- பாஸ்போர்ட் நம்பர் அல்லது இமிகிரேஷன் கார்டு நம்பர் அல்லது தற்சமயம் எந்தவொரு விசா இல்லாமல் இருந்தால் நீங்கள் விசாவிற்கான மனுவை சமர்ப்பிக்கலாம். செஞ்சிலுவைச் சங்கம் தங்களை அழைத்து இது தொடர்பாக விவாதிக்கும்.
- **பேங்க் ஸ்டேட்மென்ட்**:- தங்கள் பெயரில் பேங்க்கில் அக்கௌன்ட் இல்லாவிட்டால் தாங்கள் புதிதாக அக்கௌன்ட் தொடங்க மனுச் செயலாம்.

### என்னுடைய சொந்த தகவல்கள் யாவும் பாதுகாப்பாக இருக்குமா ?

- தங்களுடைய சொந்த விபரங்கள் மற்றும் விசா தகவல்களை செஞ்சிலுவைச் சங்கம் அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ளாது. செஞ்சிலுவைச் சங்கத்துடன் தங்களுடைய தொடர்பு ரகசியமாக இருக்கும் தாங்கள் வழங்கும் விபரங்கள் எக்காலத்திலும் ரகசியமாக வைக்கப்படும்.
- மின்னஞ்சல் (email) மூலம் எந்த விதமான சொந்த தகவல்கள் அடங்கிய மனுவை அனுப்பக்கூடாது.

### மனுச்செய்ய உதவி தேவை

- தங்களுக்கு மொழி பெயர்ப்பாளர் - தேவைப்பட்டால் TIS – 131 450 என்ற எண்ணுடன் தொடர்பு கொண்டு பேச விரும்பும் மொழியைக் குறிப்பிட வேண்டும்.
- மனுச் செய்வதற்கு உதவி தேவைப்பட்டால் தாங்கள் கீழ்க்கண்ட முகவரியில் இருக்கும் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். அலுவலக நேரத்தில் 1800 733 276 திங்கள் முதல் வெள்ளி வரை அல்லது மின்னஞ்சல் (email) மூலம் தொடர்வு செய்யலாம்.

மேலும் தகவலுக்கு செல்லவும் www.redcross.org.au/familyviolencerelief